மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண்.193/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44 வது பிரிவு 5 ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அசோக்சுப்பிரமணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : அமர்நாத் (பி.வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

06.11.2025

**முதல் விசாரணை –**

நான் அசல் வழக்கின் 2 ம் பிரதிவாதி நிறுவனத்தின் இயக்குநர் ஆவேன். 2 ம் பிரதிவாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்களை படிக்க கேட்டு தெரிந்து கொண்டேன்.

1. 06.10.2025 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி நிறுவனம் அமர்நாத் என்பவருக்கு இவ்வழக்கை பொறுத்து அளித்த அங்கீகார பிரதிநிதி கடிதம் அசல் **பிவாசாஆ 1** ஆகும்.

2. 26.04.2007 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதிக்கு பிரமிளாரவீந்திரகுமார் அவர்கள் எழுதிக் கொடுத்த பொதுஅதிகார பத்திரம் சார் பதிவக நகல் **பிவாசாஆ 2** ஆகும்

3. 23.04.2018 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதியும், 4 ம் பிரதிவாதியின் கணவர் கருப்பசாமியும் ஏற்படுத்திக் கொண்ட பரிவர்த்தனை பத்திரம் சார் பதிவக நகல் **பிவாசாஆ 3** ஆகும்

4. சாட்சியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **பிவாசாஆ 4** ஆகும்.

**(குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**